
(iii) **G** மற்றும் **H** இனை இணைக்கும் கோடு நெடுகிலும் உள்ள பகுதிக்கான குறுக்குப் பக்கப் பார்வை (cross - section) ஒன்றினை வரைக. (இதற்காக 6 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள வரைபுத்தாளைப் பயன்படுத்துக.)

(2 × 1.5 = 3 புள்ளிகள்)

குறுக்குப் பக்கப் பார்வை



அளவுத்திட்டம் - 01 புள்ளி
குறுக்குப் பக்கப் பார்வை - 02 புள்ளிகள்
மொத்தம் - 03 புள்ளிகள்

(iv) வரையப்பட்ட குறுக்குப் பக்கப் பார்வையில் காட்டப்படும் பிரதேசத்தின் இடவிளக்கவியலுக்கும் நிலப் பயன்பாட்டுக்கும் இடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக.

- இரண்டு பாறைத் தொடர்கள் வடக்கு – தெற்கு திசையில் விரிவடைந்து செல்கின்றது. அவற்றுக்கிடையிலான பள்ளத்தாக்கு இப்பகுதியின் பிரதான இடவிளக்கவியல் அம்சமாக குறுக்குப் பக்கப் பார்வையில் உள்ளடக்கப்படுகின்றது. இப்பகுதியில் பயிர்ச்செய்கைகள் இடம்பெறுகின்றன.

- படப் பகுதியின் மத்திய பிரதேசமானது 200m க்கு குறைவான தரையுயர்ச்சியைக் கொண்ட தாழ்நிலமாக உள்ளது. இங்கு நிலப் பயன்பாட்டு அம்சங்கள் உள்ளன.

- G- எழுத்துக்கு காணப்படும் பகுதி ஏறக்குறைய 500m தரையுயர்ச்சியைக் கொண்ட ஒரு மலைப் பகுதியாகும். இதன் சாய்வுகள் 200m நீளத்துக்கு பள்ளத்தாக்கின் அடிப்பகுதி வரை செல்கின்றது.

- பக்கப் பார்வையின் மறுபக்கத்தில் H எழுத்து வரையும் குழிவுச் சாய்வு காணப்படுகின்றது.

(v) படப் பகுதியில் காணப்படும் இடவிளக்கவியலுக்கும் போக்குவரத்து வலையமைப்புக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க.

- படப் பகுதியின் கிழக்கு, மேற்குப் பக்கங்கள் மலைப்பாங்கானவை. மத்திய பகுதி தாழ்நிலப் பிரதேசமாக உள்ளது. பிரதேசத்தின் மேற்கு அரைப் பகுதியில் இரண்டு மலைத் தொடர்களுக்கும் இடையில் வடக்கு – தெற்கு திசையில் நதியொன்று பாய்கின்றது. தெற்கு எல்லையில் அகன்ற ஆற்றுப் பள்ளத்தாக்கினைக் கொண்ட தாழ்நிலப் பகுதியொன்று காணப்படுகின்றது.

- இப்பிரதேசத்தின் வீதி வலையமைப்பில் பிரதான வீதியொன்று தென் பகுதியில் காணப்படுகின்றது. வண்டில் / ஜீப் வீதிகள் மற்றும் நடைபாதையும் உள்ளன.

- பிரதான வீதி கிழக்கு – மேற்கு திசையில் ஆற்றுப் பள்ளத்தாக்கினூடாக விரிவடைகின்றது. இப்பிரதேசத்தின் வீதி வலைப்பின்னலானது இடவிளக்கவியலினால் குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்படுகின்றது. குடியிருப்புக்கள் மற்றும் நிலப்பயன்பாட்டுப் பாங்குகளும் இடவிளக்கவியலினால் பாதிக்கப்படுவதைக் காணலாம்.

(05 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி III

3. (i) தரவுக்கும் தகவலுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

(2 × 2 = 2 புள்ளிகள்)

- தரவுகளில் இருந்தே தகவல்கள் பெறப்படுகின்றன.

- தரவுகள் ஒழுங்குபடுத்தப்படாதவை, செய்முறைப்படுத்தப்படாதவை பகுப்பாய்வு நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்படுபவை. இவற்றினை ஒழுங்குபடுத்தி செயன்முறைப்படுத்தும் போது அவை தகவல்களாக மாறுகின்றன.

(ii) முதன்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளுக்கு இடையிலான வேறுபாட்டினை ஆராய்க.

(4 × 1 = 4 புள்ளிகள்)

- குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஆய்வாளர் ஒருவரினால் முதன் முதலில் சேகரிக்கப்படும் தரவுகள் முதன்நிலைத் தரவுகள் எனப்படும். பிறிதொரு நபரினால் அல்லது நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்து.ம் போது அது இரண்டாம் நிலைத் தரவுகள் எனப்படும்.

- ஆய்வாளர் வெளிக்களத்திற்குச் சென்று நேரடியாகத் தரவுகளைச் சேகரிப்பதினால் அவை நம்பகத்தன்மை கொண்டதாக உள்ளது. ஆனால் இரண்டாம் நிலைத் தரவுகள் நம்பிக்கைத் தன்மை குறைந்தது.

- முதல் நிலத் தரவுகளைச் சேகரிக்கும் போது செலவுகள் அதிகமாகும். இரண்டாம் நிலைத் தரவுகளுக்கு செலவு குறைவு.

- முதலாம் நிலைத் தரவுகளைச் சேகரிக்கும் போது காலம் எடுக்கும். அதிக வளங்கள், உழைப்பு தேவைப்படும். ஆனால் இரண்டாம் நிலைத் தரவுகளுக்கு அதிக வளங்கள் தேவைப்படாது. செலவிடப்படும் காலம் குறைவு.

- இரண்டாம் நிலைத் தரவுகளில் தவறு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. முதலாம் நிலைத் தரவுக–ளில் குறைவு.

(iii) முதன்நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளை இனங்காண்க.

(4 × 1 = 4 புள்ளிகள்)

- முதல் நிலைத் தரவுகள் பல்வேறு வழிகளில் சேகரிக்கப்படுகின்றன. இவற்றினைச் சேகரிப்பதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**வினாக்கொத்து**

- ஆய்வுடன் தொடர்புபட்ட ஒரு தொகுதி வினாக்களைத் தயாரித்து தரவுகளைச் சேக்ரித்தல் வினாக்கொத்து முறையாகும். இம்முறையில் வினாக்கள் வெளிக்கள ஆய்வாளர் மூலம் வழங்கப்படும் அல்லது தபாலில் அனுப்பப்படும்.

**நேர் காணல்கள்**

- ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைச் சந்தித்து தரவுகளைச் சேகரித்தல்.

agaram.lk

**அவதானிப்புக்கள்**

- இம்முறையில் தரவுகளானது வெளிக்களத்திலேயே சேகரிக்கப்படுகின்றது. இவ் அவதானிப்பு இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.
  1. நேரடி அவதானிப்பு
  2. பங்கேற்பு அவதானிப்பு

**அளவீடுகள்**

- தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் கருவிகளைப் பயன்படுத்தல்.
  உதாரணம் : மழைவீழ்ச்சி, வெப்பநிலை, தரையுயரம் பற்றிய தரவுகள்.

(iv) முதன்நிலைத் தரவுகளைச் சேகரிக்கும்பொழுது எதிர்நோக்கப்படும் **இரண்டு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

(2 × 2.5 = 5 புள்ளிகள்)

- அதிக நேரம், முயற்சி மற்றும் செலவு ஏற்படும்.

- தேவைப்படும் கருவிகளைத் தயார் செய்தல், கருவிகளைக் கொள்வனவு செய்தல், அவற்றைப் பயன்படுத்தல், தரவு சேகரிப்பை எவ்வாறு மேற்கொள்வதென்பதைப் பற்றிப் பயிற்சி அளித்தல்.

- பதிலிறுப்பாளரின் அறிவு, மொழி, உளநிலை.

- பதிலிறுப்பவர் போதிய அறிவு மட்டத்தினைக் கொண்டிருக்க வேண்டும். கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான திறனைக் கொண்டிருக்க வேண்டும்.

- பதிலிறுப்பவரின் வாழ்க்கை முறை.

- சூழலியல் தடைகள் மற்றும் சேவைகளின் வினைத்திறன்.

**4.** (i) படம் (map) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

- புவியின் உண்மையான நிலத் தோற்றத்தினை இரு பரிமாணத் தளத்தில் அளவுத் திட்டத்தினைப் பயன்படுத்தி முன்வைப்பதே படமாகும்.

- குறியீடுகள், நிறங்கள், எழுத்துக்கள், இலக்கங்கள் மூலம் பரந்தளவான தகவல்களை முன்வைக்கும் தொழிற்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

- படங்களானது கருப்பொருட் படங்கள், இடவிளக்கவியல் படங்கள் என இருவகைப்படும்.

agaram.lk

(ii) பெரிய அளவுத்திட்டப் படத்துக்கும் சிறிய அளவுத்திட்டப் படத்துக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

(2 × 1 = 2 புள்ளிகள்)

- சிறிய அளவுத்திட்டப் படத்தில் பாரிய பகுதியைக் காட்ட முடியும். பெரிய அளவுத்திட்டப் படத்தில் சிறிய பகுதியையே காட்டலாம்.

- சிறிய அளவுத்திட்டப் படம் குறிப்பிட்ட தகவல்களே எடுத்துக் காட்டும். ஆனால் பெரிய அளவுத்திட்டப் படம் ஒப்பீட்டளவில் அதிகளவான தகவல்களை எடுத்துக் காட்டும்.

- சிறிய அளவுத்திட்டப் படம் வாசிப்பதற்கு கடினம். ஆனால் மற்றயதை இலகுவாக வாசிக்க முடியும்.

(iii) இடவிளக்கப் படத்தின் **இரண்டு** பயன்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(2 × 2.5 = 5 புள்ளிகள்)

- இடமொன்றின் சார்பளவிலான அமைவிடத்தினை இனங்காண்பதற்கான திறனைக் கொண்டுள்ளது.

- இடக்கவியல் அம்சங்களை வேறுபடுத்திப் பார்க்க முடியும். அத்துடன் அவற்றுக்கிடையிலான தொடர்புகளையும் விளங்கிக் கொள்ள முடியும்.

- பிரதேசமொன்றின் வடிகால் பாங்குகளையும், பௌதிக அம்சங்களுக்கிடையிலான தொடர்பினையும் விளங்கிக் கொள்ள முடியும்.

- பிரதேசமொன்றின் பௌதிக அம்சங்களுக்கும் மானிட நடவடிக்கைகளுக்கும் இடையிலான தொடர்பினை விளங்கிக் கொள்ள முடியும்.

agaram.lk

- நிர்வாக எல்லைகளை இனங்காண முடியும்.

- அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

- ஒட்டு மொத்தமாக பௌதிக, மானிடச் சூழலை விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

(iv) கருப்பொருட் படங்களின் நன்மைகள் **இரண்டினையும்** தீமைகள் **இரண்டினையும்** சுருக்கமாக ஆராய்க.

(2 × 1.5 = 3 புள்ளிகள்)

**நன்மைகள்**

- ஒரு படத்தில் ஒரே கருப்பொருளே தெரிவு செய்யப்படுவதால் தகவலை இலகுவாக இனங்காண முடியும்.

- உருவாக்குவது இலகுவானது. பல படங்கள் மூலம் கால ரீதியான மாற்றங்களை எடுத்துக் காட்டலாம்.

- படங்களைப் பல்வேறு அளவுத்திட்டங்களில் எடுத்துக் காட்டலாம்.

- விசேட கருப்பொருளின் கீழ் உப கருப் பொருளைப் படமாக அமைக்கலாம்.

**6.** (i) நவீன படவரைகலையியல் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

- படவரை கலையியல் என்பது படங்களையும், வரைபடங்களையும் அமைப்பது தொடர்பான ஒரு விஞ்ஞானக் கலையாகும். கணினித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட விருத்தியும், அதனுடன் தொடர்பட்ட முறையில் செய்மதிகள் மற்றும் தொலைத்தொடர்புகளில் ஏற்பட்ட விருத்தியும் இதனை நவீன மயப்படுத்தியுள்ளது.

- நுண் சில்லு, நுண் வழிமுறையாக்கி, நவீன தொலைபேசிப் பிரயோகங்கள், அச்சுப் பதிப்பு நுட்பங்கள், 3D கணினி வரைபுகள் GIS, GPS, RS என்பன முக்கிய பங்கினை வகிக்கின்றது.

(ii) புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் உள்ளீட்டுச் சாதனங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(3 × 1 = 3 புள்ளிகள்)

- இலக்க முறையாக்கல் (மேசை) கருவி / திரையில் இலக்கமாக்கி

- வருடிகள்

- காந்த விட்டு (magnaetic Disk)

- நிலைகாட்டி ( Cursor )

- GPS வாங்கி

(iii) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் (Global Positioning System) படவரைகலையியல் பயன்பாடுகள் **இரண்டினை** விளக்குக.

(2 × 2 = 4 புள்ளிகள்)

- பூகோள, தேசிய ஆள்கூறு முறையினைப் பயன்படுத்துவதன் ஊடாக, ஓர் இடத்தின் உண்மையான அமைவிடத்தினை அறிந்து கொள்ள முடியும்.

- GPS முறையினைப் பயன்படுத்தும் போது நேரடியாகவே GIS உடன் தொடர்புபடுத்தும் வசதி உள்ளது.

- வீதிகளின் அடைகையை இனங்காணுதல்.

(iv) நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளின் நன்மைகள் **மூன்றினைச்** சுருக்கமாக விளக்குக.

(2 × 3 = 6 புள்ளிகள்)

- பல்வேறு கருப் பொருட்களை வெவ்வேறு படைகளாகப் படத்தில் தேக்கி வைக்க முடியும். அத்துடன் தேவையான போது அவற்றினைத் தனித்தனியாக மீட்டுப் பெற முடியும்.

- GIS பொதியைப் பயன்படுத்தி படங்களை முப்பரிமாண முறையில் எடுத்துக் காட்ட முடியும். வினைத்திறன் மிக்க வகையில் பகுப்பாய்வு செய்வதற்கு முடியும்.

- நவீன பட வரைகலையியல் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி இடஞ்சார் மற்றும் இடஞ்சாராத் தகவல்களையும் பகுப்பாய்வு செய்ய முடியும்.

agaram.lk

